மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

பொது சன நூலகம்
13 JUN 2000
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

பக்கங்கள் ஆறு

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா 5-00

: 1 வள்ளுவர் ஆண்டு 2031 வைகாசி 31, செவ்வாய்க்கிழமை (13 - 06 - 2000) VALAMPURI ஒலி: 176

★ இனப்பிரச்சினை. தீர்வு விடயத்தில்

# இந்தியா ராணுவ ரீதியில் உதவாது

# மனிதாபிமான உதவிகள் வழங்கும்

## பேச்சுக்களின் பின் ஜஸ்வந்சிங்

(கொழும்பு)

**இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியா ஒருபோதும் இராணுவ ரீதியாகத் தலையிடப்போவதில்லை.**

**இலங்கை அரசும் விடுதலைப்புலிகள் உட்பட அனைத்துத்தரப்பினரும் கேட்டுக் கொண்டால், இந்தியா தனது பங்களிப்பைச் செய்ய என்றுமேதயாராக உள்ளதுஎன்று இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங் தெரிவித்துள்ளார்**

இரண்டுநாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு கொழும்பு வந்திருந்த அமைச்சர் நேற்று மாலை தமிழ்க்கட்சித் தலைவர்களைச் சந்தித்துப் பேசும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

முன்னதாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா இலங்கையின் வெளி விவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோரையும் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

தமிழ்க் கட்சிகளான ஈ.பி, டி.பி. புளொட், ரெலோ

(6ஆம் பக்கம் பார்க்க)

★ இந்திய வெளியுறவு அமைச்சருடனான பேச்சு

## இருநாட்டு அபிலாஷைகளை பூர்த்தி செய்யும் வகையில் அமைந்திருந்தது!

### பிரதி அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல

(கண்டி)

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியவின் கடமை பொறுப்பை வலியுறுத்தும் வகையில் இலங்[illegible] இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங் இலங்கையின பிரதேச ஒருமைப்பாடு, ஐக்கியம் ஆகியவற்றின் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்தி உள்ளார்

இவ்வாறு வெளிவிவகார பிரதி அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல கண்டிக்கு செல்லும் போது நேற்றைய பேச்சு வார்த்தை தொடர்பாக தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

இலங்கைக்கும் இந்தியா

[6ஆம் பக்கம்பார்க்க]

## இலங்கைக்கு இந்தியா 10கோடி டொலர் உதவி

(கொழும்பு)

''இலங்கைக்கு 10கோடி டொலர்களை வழங்க இந்தியா முன் வந்துள்ளது'' என்று இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங் தெரிவித்துள்ளார்.

ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்படவுள்ள இந்தப் பணம் இந்தியாவிலிருந்து கோதுமை, அரிசி, சீனி

(6 ஆம் பக்கம் பார்க்க)

### 15 நிமிட இரகசிய பேச்சு வார்த்தை

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங்கும் அதிகாரிகள் எவரினதும் உதவி இன்றி தனித்து பதினைந்து நிமிடங்கள் வரை தனிமையில் உரையாடியுள்ளனர். இனப்பிரச்சினை தொடர்பான விடயங்களையே இவர்கள் இருவரும் தனித்து உரையாடியதாகத் தெரிவிக்கப்படுகிறது. [வ]

## யுத்த நிறுத்தத்திற்கு இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் யுத்தம் தொடர்ந்து நடைபெறுமாயின் அழிவுகளே மிஞ்சும் எனவும், இதனால் யுத்தத்தை நிறுத்த இந்தியா ஆக்கபூர்வமான நடவடிக்கையை எடுக்கவேண்டுமென தமிழர் விடுதலைக் கூட்டணி இந்திய வெளியுறவு அமைச்சரிடம் கோரிக்கைவிடுத்துள்ளது.

[6ஆம் பக்கம் பார்க்க]

### பயணமானார்

(கொழும்பு)

இரண்டு நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு கொழும்பு வந்திருந்த இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங் நேற்று இரவு ஏழுமணிக்கு விமான மூலம் இந்தியாவுக்கு பயணமானார் (வ)

## யுத்தத்தின் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வினைக் காணமுடியாது

### ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு யுத்தத்தின் மூலம் தீர்வு காணமுடியாது என்பதை அரசாங்கம் உணர வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்க இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங்கிடம் தெரிவித்துள்ளார்.

வெளியுறவு அமைச்சரை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நயினை தேர் உற்சவத்தை முன்னிட்டு ஊரடங்கு நேரத்தில் மாற்றம்

நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலய தேர்த் திருவிழாவை முன்னிட்டு நாளையும், நாளை மறுதினமும் பக்தர்களின் நன்மை கருதி வலிகாமம் மேற்கு,(சங்கானை பிரதேச செயலர் பிரிவு) வலிகாமம் வடக்கு (தெல்லிப்பழை பிரதேசசெயலர் பிரிவு, வலிகாமம் தென் மேற்கு (சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவு, வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேச செயலர் பிரிவு, வலிகாமம் கிழக்கு (கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு, மற்றும் தீவுப்பகுதி உட்பட சகல இடங்களிலும் இரவு 7 மணி முதல், அதிகாலை 4.30 மணி வரை ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் எனவும்.

யாழ். பிரதேச செயலர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு நகரசபை குண்டு வெடிப்பு வழக்குத் தொடர்வது பற்றி ஆராய்வு

(கொழும்பு)

கொழும்பு நகரசபை மைதானத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட முக்கிய அரசியல் கட்சி ஒன்றின் உறுப்பினர்கள் நான்கு பேர்கள் மீது வழக்குத்தொடர்வதுதொடர்பாக ஆராயப்பட்டு வருகிறது

இந்நால்வருக்கும் எதிரா

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தற்கொலைக் குண்டுதாரியின் தலை இரசாயனப் பரிசோதனைக்கு

(கொழும்பு)

அண்மையில் இரத்மலானைப் பகுதியில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில், தற்கொலையாளிஎன சந்தேகிக்கப்படும் இளைஞரின் சிதைந்த தலையை அடையாளம் காணும் முயற்சியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இரத்மலானை பகுதிகளில் தீவிர தேடுதல் வேட்டை

(கொழும்பு)

இரத்மலானை குண்டு வெடிப்பு சம்பவத்தை அடுத்து அப்பகுதிகளில் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு விசேட பொலிஸ் குழுக்கள் அமைக்கப்பட்டு சோதனைகளும், தேடுதல்களும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

தெகிவளை, கல்கிசை

[6 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் சமாதானத்திற்கு இரு நாடுகளும் கூட்டு நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கையின் நிலையான சமாதானத்திற்காக இலங்கையும், இந்தியாவும் கூட்டாகவும் தனித்தனியாகவும் நடவடிக்கை எடுப்பதென இரு தரப்பினரும் இணைந்து வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகாவுக்கும், இந்தியா வெளியுறவு

[6ஆம் பக்கம் பார்க்க]

## அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகள் தேர்தல் குறித்து இன்று ஆராயும்

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளின் தலைவர்கள் பங்குபற்றும் கூட்டம் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் நாட்டின் இன்றைய சூழ்நிலை குறித்தும் இலங்கையின் பதினோராவது பாராளுமன்றத் தேர்தலை நடாத்துவது குறித்தும் ஆராயப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (வ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## SPOKEN ENGLISH

ஆங்கிலத்தில் சுலபமாக எழுத,வாசிக்க, கதைக்கப்பயில.(12 மணி புதிய பிரிவு ஆரம்பமாகியுள்ளது) ஆசிரியர் ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி 426 (302) காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம், நாகலிங்க சுவாமிகள் வீதி, சங்கானை.

(936)

## புலமைப் பரிசில்

ஒவ்வொரு ஞாயிறும் வெளியாகிய புலமைப்பரிசில் பயிற்சி வினாத்தாள்களைப் பெற்றுக் கொள்ளலாம். BOND யாழ்ப்பாணம்.

(876)

## தவறிவிட்டது

சோமசுந்தரம் கரிகாலன் ஆகிய எனது தேசிய, விசேட அடையாள அட்டைகள யாழ். நகருக்கும் நாச்சிமார் கோவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் வலம்புரி அலுவலகத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(933)

## தவறிவிட்டது

ஆ. ஜென்சன் றொனால்ட் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (இல. 773051186V) விசேட அடையாள அட்டை (இல 0901001074) என்பன 10.06.2000 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கண்ணகியம்மன் கோவிலடி மாவடிச்சந்தி, வட்டுக்கோட்டை [illegible] எனும் முகவரியில் ஒப்படைக்கவும் தொலைபேசி இல- 3038.

(கி-485)

## தவறிவிட்டது

சாவகச்சேரி வடக்கு கனகசபை கஜந்தன் என்பவருடைய அடையாள அட்டை வரணியில் (முள்ளி) தவறவிடப்பட்டுள்ளது, கண்டெடுத்தவர்கள் வலம்புரி பத்திரிகை நிறுவனத்தில் ஒப்படைக்கவும்.

(934)

## விற்பனைக்குஉண்டு

MD 50, Vespa மோட்டார் சைக்கிள்கள் (பாவித்தவை) விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி ஜெயராஜா ஆடியபாதம் வீதி, கொக்குவில்.

(941)

## தவறிவிட்டது

பருத்தித்துறை, புலோலி மேற்கு, வட்டப்பாதி வரதராஜா சரஸ்வதி ஆகிய எனது தேசிய அடையாள அட்டை [486873922V] விசேட அடையாள அட்டை ஆகியன 764 இலக்க பரு. யாழ்ப்பாணம் பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

(930)

## தவறிவிட்டது

283/7 புகையிரத தெற்கு வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த யோகேந்திரா பிரசாந்தி என்பவருடைய விசேட அடையாள அட்டை இல. 0901005582 பிறவுன் வீதிக்கும் பலாலி வீதிக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர் தயவு செய்து வலம்புரி காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

(935)

## உடன் தேவை

பாவித்த தமிழ் தட்டச்சு இத்திரம் உடன் தேவை. விற்பனை செய்யவுள்ளோர் நேரிலோ அல்லது தபாலிலோ ''வலம்புரி'', இல15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் கட்டண விபரத்துடன் [illegible]

---

# யாழ். ஜெய்பூர் செயற்கைக்கால் திட்டம்

மேறபடி நிறுவனத்தின் அலுவலகம் தற்காலிகமாக நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் காலை 9.00 மணிமுதல் பகல் 12.00 மணிவரை இயங்கும் என்பதை அறியத்தருகின்றோம்.

நிர்வாகத்தினர்

(கி 488)

---

# சித்தமருத்துவ மாணவர் மன்றம்
## அவசர பொதுக் கூட்டம்

காலம்:-14-06-2000 புதன்கிழமை காலை10.30மணி.
இடம்:-கைலாசபதி கலையரங்குயாழ். பல்கலைக்கழகம்.
விடயம்:- விரிவுரைகளை ஆரம்பிப்பது தொடர்பாக ஆராய்தல்.

சகல மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(954) செயலாளர்.

---

# தகவல் தரவும்

யாழ். பல்கலைக்கழக சித்தமருத்துவத்துறையைச் சேர்ந்த பின்வரும் மாணவர்கள் தம்மைப் பற்றிய விபரங்களை உடன் அறியத்தரவும்.

1) ஆனந்தஜோதி சின்னப்பு — சாவகச்சேரி.
2) ராஜாஜி ரவிராஜ் — சாவகச்சேரி.
3) எஸ். அனுஷியா — சாவகச்சேரி.
4) கவிதா நடராசா — கச்சாய்.
5) கார்த்திகாஜினி கதிர்காமநாதன் — கைதடி.
6) டிசிஜந்தி சண்முகநாதன் — நுணாவில்.

சித்தமருத்துவ மாணவர் மன்றம்,
யாழ். பல்கலைக்கழகம். [955]

---

# கலந்துரையாடல்

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களுக்கான மாதாந்தகலந்துரையாடல்கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சு.கணேசமூர்த்தி அவர்கள் தலைமையில்14-06-2000 புதன்கிழமை முற்பகல் 11மணிக்கு கூ.அ.உ.ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறும். தலைவர் பொதுமுகாமையாளர்கள் தவறாது சமுகம் தரவும்.

சு.கணேசமூர்த்தி

கூ.அ.உ.ஆணையாளர்
(பனைதென்னைவள அபிவிருத்தி)
யாழ்ப்பாணம். (கி-487)

---

# கண்ணீர் அஞ்சலி

எமது சகமாணவன் ஏ. அனுசாந்தன்
அவர்களின் அன்புத்தாயார்
## திருமதிஅருணேஸ்வரி-ஏரம்பமூர்த்தி

அவர்களின்பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிபபதுடன் அவரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இந்துநாகரிகத்துறை
இறுதி வருட (B) பிரிவு மாணவர்கள். (947)

---

# கண்ணீர் அஞ்சலி

யாழ். மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயஆசிரியை
திருமதி தெ. கிருஷ்ணசாமி அவர்களின்
அன்புக் கணவரும் மேற்படி வித்தியாலய பகுதி நேர ஆங்கில ஆசிரியரும் ஓய்வு பெற்ற தபால் அதிபரும் 'அயோத்தி' தொலைத் தொடர்பு உரிமையாளருமாகிய

## க. சி. கிருஷ்ணசாமி

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தற்போதைய முகவரி: சரவணமுத்து சத்திய பவன்,
ஆவரங்கால். சரசாலை. [951]

---

# கண்ணீர்ப் பூக்கள்

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின்
செயலாளர்
செல்வன் கி. திவ்வியன் அவர்களது
அன்புத் தந்தையார்
## திரு க. சி. கிருஷ்ணசாமி

அவர்களின் திடீர் மறைவிற்கு எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குவதோடு அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தாரிற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

விவசாய மாணவர் ஒன்றியம்,
விவசாயபீடம்.

(956)

---

# 'அற்புதவரத்தன் அகிலத்தில் எழுகின்றார்!'

எத்திசையும் சத்திய மா மறை முழங்க:
பத்தியது புத்தியில் நித்தியம் திததிக்க;
உத்தமம்; உயர் அன்பு: தர்மம உலகில் பொங்க;
அத்த பரஞ்சுடராம் கர்த்தனைக் கரம் ஏந்தி
சுத்தன் அந்தோனியார் சித்திரத் தேரெழுந்து
வருகிறார் பார்!
சீரோரும்; பாரோரும்; வானோரும் சிந்தையாற்
துதி புரியும்
பேரரும்; மெய்ஞானச் சத்திய மா மறைப்
பேராளன் அந்தோனி;
காரிருட் கடல் பிழந்த கரத்தனைக் கைத்
தரித்தே
பாருலகில் பேரருள் வான் திறந்து பெய்யத்
தேரேறி வருகின்றார் பார்!

முகமாலை தே. ச. வில்சன்

★ (நாவாந்துறை புனித அந்தோனியார் திருநாளை முன்னிட்டு இக் கவிதை பிரசுரமாகிறது.

---

# குறிகாட்டுவான் ஊடாக படகுச் சேவை

[ஊர்காவற்றுறை]

நயினாதீவுக்கு குறிகாட்டுவான் ஊடாக மட்டுமே படகுச் சேவை இடம் பெறுகின்றது.

நயினாதீவு நாகபூஷனி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவ காலத்தில் பக்தர்கள் ஆலய வாழிபாட்டுக்குச் செல்வதற்கு குறிகாட்டுவான் ஊடாக பயணம் மேற்கொள்கின்றார்கள்.

யாழ்ப்பாணம், வேலணை, ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் இருந்து செல்லும் பக்தர்கள் குறிகாட்டுவான் துறைமுகத்தினை மட்டுமே பயன்படுத்துவதனைக்காணக் கூடியதாக உள்ளது.

எதிர்வரும் 16ம் திகதி வரை இடம் பெறவுள்ள உற்சவ காலங்களில் கலந்து கொள்ளும் பக்தர்கள் குறிகாட்டுவான் பாதையையே பயன்படுத்த முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் ஊர்காவற்றுறைத் துறைமுகத்தின் ஊடாகவும் பக்தர்கள சென்றார்கள் எனவும் ஆனால் தற்பொழுது ஊர்காவற்றுறைத் துறைமுகம் பொது மக்கள் பாவனைக்குத் தடை செய்யப்பட்டுள்ளது எனவும் கூறப்பட்டது.

(சி-75)

---

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் சுப்பிரமணியம் கனகசபை
(இளைப்பாறிய கிராமசேவையாளர் கருகம்பனை)

எமது பாடசாலைக்கு நிலம் வழங்கி வித்திட்டவரும். பாடசாலை வளர்ச்சியில் அயராது பாடுபட்டவரும். எமது பாடசாலை முன்னாள் ஆசிரியை திருமதி வசந்தினி, கார்த்தவீரியன் அவர்களின் அன்புத் தந்தையுமாகிய அமரர் சு. கனகசபை அவர்களின மரணச் செய்தி கேட்டு அளவிலாத் துயரம் அடைகிறோம்.

அன்னாரின் பிரிவால் துயரமுற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர்சங்கம்,

யா/கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலயம்
(957)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

மலர்வு | உதிர்வு

11-07-1943  14-05-2000

## அமரர் செல்வி பொன்னம்பலம் கமலாதேவி
(ஓய்வு பெற்ற ஆசிரியை)

அன்பின் திருவுருவாய் பாசத்தின் சிகரமாய், பாசத்தின் உறைவிடமாய் இருந்து எம்மையெல்லாம் வழி நடத்திய அன்புச் சகோதரியின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்திகளை அனுப்பியோருக்கும் மற்றும் பல வழிகளில் உதவி செய்தவர்களுக்கும் எங்கள் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு 13-06-2000 செவ்வாய் காலை 10. 30 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெற இருக்கும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் மற்றும் மதிய போசன வைபவத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும் அன்புச் சகோதரர்கள், சகோதரிகள், மைத்துனர்கள், மைத்துனிகள் பெறாமக்கள், மருமக்கள்.

தகவல்:
பொ. பாலசுப்பிரமணியம்
(இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்)
''கமலாம்பிகை பவனம்''
இணுவில் மேற்கு,
இணுவில். (சி/489)

# இலங்கை இனப்பிரச்சினைத்தீர்வுக்கு கருணாநிதி கூறிய கருத்து தவறானது

(சென்னை)

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக நடைபெற்றுவரும் சம்பவங்களை வெறுமனே பார்த்துக்கொண்டிருக்காமல் அதற்குத் தீர்வு காண அரசியல்ரீதியாகவோ, ராஜீயத்துறை ரீதியாகவோ பங்காற்ற வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தேசிய செயலாளர் டி.ராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக ஆராய்வதற்கு பிரதமர்வாஜ்பாய் அனைத்து அரசியல் கட்சிகளின் கூட்டத்தைக் கூட்டி விசாரிக்க வேண்டும் என்றும்,

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுக்கான தமிழகமுதல்வர் மு.கருணாநிதிதெரிவித்த பிரிவினை வாதக்கருத்து தவறானது கூட்டணி அரசில் அங்கம் வகித்துக்கொண்டு நிலைப்பாட்டிற்கு முரணாக தி.மு.க தலைமை தெரிவித்த கருத்து கண்டிகத்தக்கதாகும் என்றார். (வ)

## உலருணவு வழங்கல்

[மானிப்பாய்]

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் தங்கியிருக்கும் இடம் பெயர்ந்த வர்களுக்கு முதலாவது கட்டஉலர் உணவு நிவாரணம் அந்தந்தப் பகுதி ப.நோ.கூ சங்க கிளைகள் மூலம் தற்போதுவழங்கப் பட்டு வருகின்றது.

[சி-120]

## இடம் பெயர்ந்துள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல்

யாழ்.மாவட்டத்தில் சொந்த இடங்களிலிருந்துஇடம் பெயர்ந்து, வேறு இடங்களில் தங்கியுள்ள முன்பள்ளி ஆசிரியர்கள் 14.06.2000 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ள அவசரக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

T.V. கிருஸ்ணசாமி,
பிராந்திய உள்ளூராட்சி உதவி,
ஆணையாளர் அலுவலகம்,
செட்டித் தெரு ஒழுங்கை நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(946)

## அறிவித்தல்

கொடிகாமம் ப.தெ வ.அ கூ.சங்கத்தின் கணக்கு விபரங்களைப் பெற்று கணக்கினைச் சீர்செய்து கொள்வதற்காகவும்,ஏனைய நடவடிக்கைகள் தொடர்பாகவும் 13-06-2000 அன்று காலை 9.00மணியாளவில் வடமராட்சிக் சொத்தணிக்காரியாலயத்திற்கு அனைத்துப் பணியாளர்களையும் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

பொதுமுகாமையாளர்-

தலைவர்.

(944)

## இடம் மாற்றம்

இல. 44/1. யாழ்வீதி. யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த எமது நகைத் தொழிலகம்.

**சுவிஸ்ஸோகோல்ட் கட்டிங் ஜுவலஸ்**

இல. 40/1. பிரதானவீதி, சங்கானை என்னும் இடத்தில் நிறுவப்பட்டுள்ளது. என்பதனை வாடிக்கையாளர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

உரிமையாளர்.

(939)

## வர்த்தக சங்கம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

பூட்டப்பட்ட கடைகளையும், பொதுமக்களின் வீடுகளையும் உடைத்து விற்கப்படும் பொட்களை கொள்வனவு செய்யவேண்டாமென யாழ். மாவட்ட வர்த்தக சங்கங்களின் சம்மேளனம், வேண்டுகோள் விடுத்துள்ளது. (க)

## கொக்குவில் நூலக செயற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர் நலன்கருதி கொக்குவில் உப - அலுவலகப் பொது நூலகம் தினசரி காலை 9.00 மணிமுதல் மாலை 5.30 மணிவரை திறந்திருக்கும் என்று நல்லூர் பிரதேசசபைச் செயலாளர் திரு. எஸ். செல்வரத்தினம் நேற்று தெரிவித்தார்.

இச் சபையின் ஏனைய நூலகங்கள் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரைதிறந்திருக்கும் என்றும் அவர் சொன்னார்.

(சி-க)

## விளையாட்டு உத்தியோகத்தர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாண பொதுச் சேவையின் கீழ்யாழ். மாவட்டத்திற்கு 14 விளையாட்டு உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

இவர்களின் நியமனம் 05.06.2000ல் இருந்து அமுலுக்கு வருகின்றது. நியமனம் செய்யப்பட்ட விளையாட்டு உத்தியோகத்தர்கள் விபரம் வருமாறு:

திரு.செ. மகிந்தன்-நல்லூர் திரு. பா. பாஸ்கரன்-உடுவில் திரு. ம. பற்றிக்டிரஞ்சன்-ஊர்காவற்றுறை, திரு. பா. முகுந்தன்-மருதங்கேணி, திரு க.முகுந்தன்-கரவெட்டி, திரு. இரா.இராஜசீலன்-பருத்தித்துறை, திரு. ம. றி. மோகனதாஸ்சண்டிலிப்பாய், திரு. செ திருமாறன்-யாழ்ப்பாணம், திரு. க. விஜிகரன்-நெடுந்தீவு திரு. கு முகுந்தன் கோப்பாய், சி. மனோன்மணி சங்கானை, திரு செ. சதீஸ் குமார் - சாவகச்சேரி, திரு. செ. றமணன்-தெல்லிப்பழை திரு,கா.சுதாகரன்-வேலணை

மேலும் இவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று 14-06-2000 காலை 10.00 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறுமென மேலதிக அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம்தெரிவித்துள்ளார். (சி)

## 31ம் நாள் நினைவு அஞ்சலி



| தோற்றம் | சிவபதம் |
|---|---|
| 10 - 07 - 1916 | 14 - 05 - 2000 |

அமரர்

**திரு. சின்னத்தம்பி ஆறுமுகசாமி**

(ஓய்வு பெற்ற சுகாதாரப் பரிசோதகர்)

எமது அன்புத் தெய்வம் சிவபதம் அடைந்து 31ம் நாளாகிய இன்று (2000-06-13) அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் ஈமைக் கிரிகைகளிலும் கலந்து கொண்டவர்களுக்கும் அன்று தொடக்கம் அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்களுக்கும் எமது நன்றியறிதலை மிகவும் பணிவாகத் தெரிவிக்கின்றோம்.

இங்ஙனம்
பிள்ளைகள்
ஆ. நாகேந்திரா
பாடசாலை வேலைப் பரிசோதகர்
வலிகாமம் வலயக் கல்வித்திணைக்களம்
திருமதி சி. நாகபூஷணி
திருமதி ச. நாகராணி

வருஷப்புலம்,
சுன்னாகம்.

(815)

## கண்ணீர் அஞ்சலி

திருமதி. தெ. கிருஷ்ணசாமி
யா/மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய
இசை ஆசிரியை
அவர்களின் அன்புக் கணவரும்
மேற்படி வித்தியாலய பகுதி நேர ஆங்கில
ஆசிரியரும் ஓய்வுபெற்ற தபாலதிபருமாகிய

**திரு. க. சி. கிருஷ்ணசாமி**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தென்மராட்சி,
இசை ஆசிரிய ஆலோசகரும்,
ஆசிரியர்களும்.

(947)

## UNIVERSITY OF JAFFNA

## POST OF COMPUTER APPLICATIONS ASSISTANT

A practical test will be held at the Computer Unit of this University on 2000-06-20 during 10.00 a m to 1 00 p m, regarding the applications for the post of Computer Applications Assistant.

The following candidates are requested to be present for the above test (Individual letters posted.):

| NAME | INDEX NO: |
|---|---|
| Mr S Branavan | CA-03 |
| Mr S. D Jeshanthan | CA-05 |
| Miss N Murugesu | CA-15 |
| Mr. P. Pathmaraj | CA-18 |
| Mr. S M Preman | CA-19 |
| Mr. S. Sentooran | CA-22 |
| Mr. R Sriharan | CA-25 |
| Mrs. K Suthaharan | CA-28 |
| Mr' S Manivannan | CA-49 |
| Miss T Nagarajah | CA-64 |
| Mfss S Selvarajah | CA-99 |
| Mr K Ramesh | CA-131 |
| Mr S Sasikumar | CA-146 |
| Miss. N Satchithananthan | CA-148 |
| Mr. N. Vasanthakumar | CA-173 |

REGISTRAR
University Of Jaffna,
Jaffna.

(இ484)

காலகண்டர் துணை

## பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் விக்கிரம வருஷம் வைகாசி மாதம் 32. ஆம் நாள் (14.06 2000) புதன்கிழமை காலை 5.54 - 6.35 மணிவரை வரும் சுபவேளையில்,

எமது செல்வப் புதல்வி

★ **செல்வி ஜெனனி** ★

அவர்களுக்கு பூப்புனித நீராட்டுவிழா நடாத்த இறையருள் கூடியுள்ளதால் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து செல்வியை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பழைய முகவரி:- கல்லூரிவீதி, காங்கேசன்துறை.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்,
திரு. திருமதி வ. மகேந்திரன் குடும்பம்.
(ஆனந்தன்)

7 ஆம் கட்டை மல்லாகம்,
காலகண்டர் ஆலயம்.
(929)

# தென்மராட்சி ஷெல் தாக்குதலில் ஒன்பது பேர் பலி 28பேர் காயம்

(வவுனியா)

தென்மராட்சிப்பகுதியில் சனிக்கிழமை இடம்பெற்ற பல்லான எறிகணை வீச்சினால் கொல்லப்பட்ட படுகாயமடைந்த பொதுமக்கள் சிலரின் விபரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

நூட்பிரகாசம் சாஸ்த்திரி (நுணாவில் தெற்கு சாவகச்சேரி), சோமசுந்தரக்குருக்கள் கோபாலகுமார் (வயது 20-செல்லப்பிள்ளையார் வீதி மட்டுவில் வடக்கு), சங்காப்பிள்ளை ஷாலினி [வயது15] செல்லப்பிள்ளையார் வீதி மட்டுவில் வடக்கு, தாபுசபாரெட்ணம் (வயது 43), மட்டுவில் தெற்கு, தம்பு மனோன்மணி (வயது 50) மட்டுவில் தெற்கு சாவகச்சேரி, சபாரெட்ணம் விஜிதா(வயது02) சிவசோதி (வயது46)செல்லப்பிள்ளையார் வீதி, சந்திர மௌலீசா அதிபர் கல்வயல், வாரித்தம்பி சிவபாக்கியம் (வயது 70) கல்வயல், சின்னத்தம்பி (வயது67) மட்டுவில, ஆகியோரே உயிரிழந்த பொதுமக்கள் ஆவர்.

சிவபாக்கியம் (வயது 70) கல்வயல், ஞா. வளர்மதி (வயது 28) கல்வயல், சரோஜினிதேவி (வயது66) நுணாவில் மேற்கு, அ. வினோதினி [வயது29] தவசிகுளம் மிருசுவில், தோம்சன் எறிச்ஞானகி (வயது 05) தவசிகுளம் மிருசுவில், ஞானராசா சிவதர்ஷனி சுன்னாகம், திருமதி அற்புதன் மட்டுவில் தெற்கு, பாடசாலை அதிபர் வேதாரணியம், ஈஸ்வரன் கல்யாணி (வயது 42) வேம்பிராய், சிவபூரணம் (வயது78) கல்வயல், உதய சந்திர சர்மா (வயது 27) கல்வயல், மகாதேவன் தேவன் (வயது 10) செல்லப்பிள்ளையார் வீதி மட்டுவில், சபாரெட்ணம் மதுஷன் (வயது 04) மட்டுவில் தெற்கு. பாக்கியராசா டிலானி (வயது22) மட்டுவில் தெற்கு. பாலசுந்தரம் பேபி சரோஜா (வயது22) மட்டுவில் தெற்கு, [illegible] நவரெட்ணம் ரோகினி (வயது21) மிருசுவில், அ. ரவீந்திரன் [illegible] கந்தபுரம், வை. இராசதுரை (வயது75) பெய்கண்டான் ஒழுங்கை சாவகச்சேரி, அ. ரவீந்திரன் (வயது43) சிவன்கோவிலடி சாவகச்சேரி, செ சுவேந்திரன் (வயது18) மட்டுவில்கிழக்கு, எஸ். சுஜிதரன் (வயது18) சரசாலை, ந. சின்னத்தம்பி (வயது 75) கைதடி மத்தி. ஜெ. சித்திரா (வயது 23) மீசாலைவடக்கு, க. மஞ்சுளாதேவி (வயது 30] மட்டுவில் வடக்கு, சி. செல்லத்துரை [வயது 80] கனகம்புளியடிச் சந்தி சாவகச்சேரி, எஸ். நல்லம்மா (வயது 56) கல்வயல் ஆகியோரேகாயமடைந்தவர்களாவர். (ந-7)

## இடம் பெயர்ந்த மக்களுக்கு வடமராட்சியில் நிதியுதவி

குடாநாட்டில் தற்போது நடைபெற்றுவரும் யுத்தநடவடிக்கைகளால் தென்மராட்சியிலிருந்து இடம் பெயர்ந்து வடமராட்சியில் தங்கியிருக்கும் மக்களுக்கும், காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்சப்பட்டுள்ள மக்களுக்கும் வடமராட்சியிலுள்ள பொது அமைப்புக்கள் மற்றும் மாணவர் அமைப்புக்களால் நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றன.

வடமராட்சியிலுள்ள நூல் நிலையங்கள், சங்கங்கள் பாடசாலை சாரணர் அமைப்புக்கள் போன்றன தத்தமது பிரதேசங்களில் உள்ள பொதுமக்களிடமிருந்து நிதியினைச்சேகரித்து இடம் பெயர்ந்து இன்னலுறும் மக்களுக்கு வழங்கி வருகின்றன.

அதேவேளை வடமராட்சியைச்சேர்ந்த யாழ்.பல்கலைக்கழக மாணவர்களாலும் தென்மராட்சியிலிருந்து இடம் பெயர்ந்த மக்களுக்கும் யுத்தத்தினிடையே சிக்கிகாயமடைந்து மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள மக்களுக்கும் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. (க-20)

## வதந்திகளை பரப்பும் முயற்சியில் சிலர் திட்டமிட்டு ஈடுபடுகின்றனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பகுதியில் வதந்திகளைப்பரப்பும்முயற்சியில் சிலர்திட்டமிட்டுஈடுபட்டு வருவதாகப் பொதுமக்கள் தரப்பில் புகார் தெரிவிக்கப்படுகிறது.

மக்களை தமதுஇருப்பிடத்திலிருந்து வெளியேற்றிவிட்டு திருட்டு முயற்சியில் ஈடுபடும் முகமாகவே இத்தகையமுயற்சியில் இவர்கள் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது

இதுவிடயத்தில் மிகவும் எச்சரிக்கையுடன் பொதுமக்கள் நடந்து கொள்ளவேண்டுமென நலன்விரும்பிகள்கருத்து வெளியிட்டுள்ளனர். (க)

## 3-ஆம் ஆண்டு நினைவலைகள்



**மரியம்மா பிறின்ஸ்**

(இளைப்பாறிய ஆசிரியர்- யா/ கன்னியர் மடம் மகா வித்தியாலயம்)

**ஆண்டவன் அடியில்:13-06-97**

இன்று தான் எம் இன்பத்தின் இறுதி நாள்
எம் தெய்வம் மறைந்த கரிநாள்
தேவனின் இல்லம் குடிகொள்ள
படியேறி சென்றபுனிதநாள் ஆனி பதின் மூன்று
மூன்றாண்டு கடந்தாலும் பசுமையாய் பனிப்பூவாய்
மனமெல்லாம் படர்ந்து நாளெல்லாம் எம்முன்னே
நடந்து வரும் தெய்வமே நீ வாழ்கிறாய் என்ற
நிஜத்தில் நாம் வாழ்கிறோம்.

தங்கள் பிரிவால் தவிக்கும்
கணவன், பிள்ளைகள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்.

(853)

## விசேட அடையாள அட்டை ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்

தெல்லிப்பழையை சேர்ந்த பொன்னம்பலம் இராசலிங்கம் என்பவரின் விசேட அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு 'வலம்புரி' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இல. 0907015938 ஆகும். உரியவர்கள் பெற்றுக்கொள்ளவும். (க)

## செய்திப்பரல்

★ இந்தியா ஐ நா. பாதுகாப்புச்சபையில் நிரந்தர அங்கத்துவம் பெறுவதை பிரான்ஸ் போன்ற நாடுகளுடன் பல்கேரியாவும் ஆதரிக்கிறது.

★ சிங்கப்பூரில் பனி நகரம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் அதனால் சுற்றுலாத்துறை பெரும் நன்மையடையும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

★ இந்திய மத்திய அமைச்சர் அத்வானிக்கு நீதிமன்று பிடிவிறாந்து பிறப்பித்துள்ளது.

★ ஜனநாயக பாரம்பரியத்தின் ஒரு நிலையான சின்னமாக இந்திய நாடாளு மன்றம் திகழ்கிறது என்று அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிங்டன் கூறியுள்ளார்.

★ பாகிஸ்தானின் அணு ஆயுதங்கள் இந்திய அணு ஆயுதங்களைவிட சக்தி வாய்ந்தவை என்று அமெரிக்கா கூறியுள்ளது.

★ கோவா, கேரளா ஆந்திர மாநிலக் கிறிஸ்தவ தேவாலயங்களில் குண்டுகள் வெடித்திருக்கின்றன. (து)

## ராஜேஸ் பைலட் காலமானார்

(புதுடில்லி)

முன்னாள் மத்திய அமைச்சர் ராஜேஸ் பைலட் வாகன விபத்தொன்றில் காலமானார்.

இவரின் மறைவினால் அதிர்ச்சி அடைந்த காங்கிரஸ் கட்சித் தலைவர்கள்உட்படப் பலரும் அவரின் பெருமைகளை நினைவுகூர்ந்தனர். (து)

## வடகொரியா மீதான தடைகள் நீக்க அமெரிக்கா தயாராகிறது

வடகொரியா மீதானதடைகளை நீக்குவதற்கு அமெரிக்கா தயாராகிறது.

இந்தமாத இறுதிக்குள் இந்தத்தடைகள் நீக்கப்படலாமென்று அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கிளிங்டன் கடந்தவருடம் செப்டெம்பர் மாதம் வடகொரியாவிற்கெதிரான சிலதடைகளை நீக்குவதற்கு உடன்பாடு கண்டிருந்தார், அதை இந்தமாத இறுதிக்குள் அமுல்படுத்த முடிவு செய்யப்பட்டிருக்கிறதென்றும் பேச்சாளர் கூறினார்.

அதேசமயம் வடகொரியாவில் ஏவுகணைத் திட்டம்பற்றியும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க அமெரிக்க அதிகாரிகள் உத்தேசித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (து)

## ஷெல்கள் விழுந்து வெடித்ததில் இளைப்பாறிய தபாலதிபர் பலி

(புலோலி)

மீசாலையைச் சேர்ந்த இளைப்பாறிய தபாலதிபரான சின்னப்பு கிருஷ்ணசாமி (வயது 60) ஷெல் தாக்குதலினால் வெள்ளிக்கிழமை பலியானார்.

மீசாலையைச் சேர்ந்த குணரத்தினம் குணேந்திரன் வயது (30) சரசாலையைச் சேர்ந்த எஸ். வாமதேவன் (வயது 65) மிருசுவிலைச் சேர்ந்த செல்லையா ஜெயசீலன் (வயது 44) ஆகியோர் ஷெல் தாக்குதலினால் பலத்த காயங்களுக்குள்ளாகி பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (க-52)

## கடத்தப்பட்ட கப்பல் மீட்பு

(புதுடில்லி)

அரபிக்கடலில் இத்தாலியக் கப்பல் ஒன்று கடத்தப்பட்டுள்ளது.

34 பேருடன்கடத்தப்பட்ட இந்தச் சரக்குக் கப்பலை விடுவிப்பதற்குரிய பேச்சுவார்த்தைகள்நடைபெறுகின்றன.

குஜராத்தின் போர்பந்துக் கடற்கரைக்கு இந்தக்கப்பல் இந்திய கடற்படையினரால் கொண்டுவரப்பட இருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (து)

## வழிபாடு

(யாழ்ப்பாணம்)

தேசத்தின் சமாதானத்தை வேண்டி இலங்கை பெந்தகொஸ்தே சபையினர் விஷேட நோன்பு வழிபாடுகள் ஒழுங்கு செய்துள்ளனர். மானிப்பாயிலுள்ள ஆலயத்தில் செவ்வாய், வெள்ளி ஆகிய இருதினங்கள் காலையிலும் நவாலியில் உள்ள ஆலயத்தில் வியாழன் காலையிலும் இச்சமாதான வழிபாடுகள் இடம் பெறவுள்ளன. (சி-12)

## சொலமன்தீவில் யுத்த நிறுத்தம்

தீவிர் புரட்சியினால் மேற்கு பசுபிக் தீவுகள் நாடான சொலமனில் அமைதியை வேண்டி காமன்வெல்த் அமைதிகள் குழு ஒன்று அங்கு பயணம் செய்ய வசதியாக 14 நாட்கள் சண்டை நிறுத்தம் ஒன்றுக்கு போரிடும் இரு குழுக்களும் இணங்கியுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றது.


Jaffna Technical Institute
JAFFNA, SRI LANKA.
Reg. No: 15251 T P: 3335

எமது நிறுவனத்தால் நடாத்தப்பட்ட சகல பயிற்சி வகுப்புக்களும் நாளை (14-06-2000) புதன்கிழமை முதல் ஆரம்பமாக உள்ளதால் சகல மாணவர்களும் உடன் தொடர்பு கொள்ளவும்.

இயக்குநர்,
N. Jeyabalasingam
M. D & Teacher
இல. 7, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

52/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(937)

தேசிய சேமிப்பு வங்கி அறிவித்தல்
தேசிய சேமிப்பு வங்கி சாவகச்சேரிக் கிளை

மேற்படி வங்கிக் கிளையின் கொடுக்கல் வாங்கல்கள் புதன்கிழமைகளில் யாழ்ப்பாணக் கிளையிலும் ஏனைய நாட்களில் சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கிக் கிளையிலும் நடைபெறும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம்.

முகாமையாளர்.
தேசிய சேமிப்பு வங்கி,
சாவகச்சேரி.
(927)

யாழ்ப்பாணக்கல்லூரி பட்டதாரிப்பிரிவு
வட்டுக்கோட்டை

GAQ (யாழ்/பேராதனை), B.A Part I & Part II (யாழ்) B A Efinalt (பேராதனை), First In Com (யாழ்) ஆகியகற்கை நெறிகளுக்கான விரிவுரைகள் Literature Linguistics, உட்பட சகல பாடங்களுக்குமான மாலை நேர கிழமைநாள் விரிவுரைகள் நடைபெறுகின்றன. மாணவர்களுக்கு நூலகவசதி, கட்டுரை வகுப்புக்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

மேலதிகவிபரங்களுக்கு,
JAFFNA COLLEGE
Undergraduate Dept
Jaffna Branch
464, Hospital Rd,
Jaffna.

பதிவாளர்
யாழ்ப்பாணக்கல்லூரி
வட்டுக்கோட்டை
(931)

நள்ளா விளையுளும்
தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு
- குறள்

# வலம்புரி

## சொந்த மண்ணின் சுகம்

சொந்த மண்ணின் சுகம் பெரிது தான் ஏம்பலித்து ஏதிலிகளாய் அலைந்து அவலப்படும் வேளை தமது இல்லத்தின் இனிமையை நினைந்து சிந்தை நோவதைக்காணலாம். வடபுலத் தான் சொந்த மண் இன்று சுடு மண்ணாகப் பற்றி எரிகிறது. எங்கு பறந்து போய் திரவியம் ஈட்டியவனும் தன் தாய் மண்ணில் நிற்கின்ற போது அனுபவிக்கின்ற ஆனந்தம் அலாதி தான.

அந்த ஒன்றுக்காய் தன்னை மறந்தவர் ஆயிரமாயிரம். இன்னுயிர் தந்தவர் சுற்றம் அறுத்து சுகம் மறந்தவர் ஆயிரமாயிரம். அந்த மண்ணின் சுகம் இத்தனை ஆகுதிகளுக்குப் பின்னும் வந்து தொலைகின்றதில்லையே வலுவான ஊழ்வினை உழைப்பையும் உயிர்த்தியாகங்களையும் மதிக்கவில்லை போலும்.

முந்தையோர் சொன்ன வார்த்தைகள் நிதர்சனமாகிற வேளையிது, சிதறிப் போவான், பறந்தற்றுப்போவான், எனப்பல வகையில் சினம் வந்த வேளைசீறி விழுந்தார்கள் அந்த வார்த்தைகள் இன்று அர்த்தம்பெறுகின்றன. ஷெல் அனர்த்தங்களால் சிதறிச் சின்னாபின்னப்படும் உடல்களைக் காணுகின்றோம், பல்வகைச் சிரமங்களின் மத்தியில்விமானம் ஏறுவோர் பிரயாணத்தைப் பூர்த்தி செய்யாது அற்றுப்போவதைக் காண்கின்றோம். இத்தகைய அவலங்களுக்கு மத்தியிலும் எங்கள் மண்ணின் தக்கு இதமாக விருச்கிறது. அது தான் சுதந்திரத்தின் சூக்குமம்.

சிறு குடிலாயினும் ஏழைக்கு அது சிவகுடி சிந்தை களிக்க உருண்டு புரளும் உவப்பான இடம் இன்றைக்கு அவையெல்லாம் சிதைந்து அழிந்து போவதைக் கண்டும் மண் பற்றுமாறாது இந்தமண்ணிலே மடியஉறுதி பூண்ட உயிர்களைப் பாராட்ட வேண்டும்.

உதவி புரியவன் உபத்திரப்பட வேண்டும் என்று எந்த வேதம் கூறிற்று. அடையா நெடுங்கதவாய் ஐப்பசி31ல் அவலப்பட்டுச் சென்ற அத்தனை மக்களுக்கும் அடைக்கலம் கொடுத்த மண் தென்மராட்சி. இன்று நிணச் சேறு படிந்த நிலமாய் சொத்துக்கள் சிதைந்த மண்ணாய் சீரழிந்து போன நிலை சிந்தையை நெருடுகிறது.

யாழ்ப்பாணம் போல சாவகம் பொலியும் என்பது உறுதி தென்மராட்சி திகழும் என்பதும் தெளிவு

- அன்புடன் ஆசிரியர்

# ஷெல் மழையிலிருந்து தப்புவதற்கு

# 20தினங்கள் பதுங்குகுழிவாசம்

## கைதடியிலிருந்து வந்தவரின் திகில் அனுபவம்

[யாழ்ப்பாணம்]

கடந்த மாதம்18 ஆம் திகதியின் பின்னர் மழைபோன்று ஷெல்கள் வீழ்ந்து வெடிக்கத் தொடங்கின வீட்டில் இருப்பதே ஆபத்தானதாக மாறியது, கடும் ஷெல் ஓசைகளின் மத்தியில் பலமானஒருபதுங்கு குழியினை அமைத்து அதற்குள் 20 நாட்கள் பீதியுடன் வாழ்ந்தோம்.

கைதடியிலிருந்து இடம் பெயர்ந்து தற்போது இளவாலையில் வசிக்கும் கந்தசாமி கோவிந்தராஜன் தமது பயங்கர அனுபவம் பற்றி விபரிக்கையில மேற்கண்டவாறுதெரிவித்தார் அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஒவ்வொரு வெடிப்புக்களினாலும் மண்கள் சொரிந்து கொட்டுவதும், படுக்கை விரிப்புகளை தூக்கி எறிந்த வண்ணமாகவே இருந்தன இதனிடையே சமையலறைக்குநெல்மூடைகளினால் பாதுகாப்பு அரண்கள் அமைக்கப்பட்ட கஞ்சியை வைத்து காய்ச்சி உடகொண்டோம்.

எங்கு போவதென்றாலும் பதுங்கு குழிஎன்ற நிலை இருந்தபடியினால் வீட்டு சூழலில முக்கிய பகுதிகளில் பதுங்கு குழிகளை உருவாக்கிவைத்தே அந்த 20 நாட்களையும் கழித்தோம், எமக்கு பைத்தியம் பிடித்தது போலவே இருந்தது.

மேலும் கைதடியை பொறுத்தவரையில் 90 வீதமான கட்டடங்கள் ஷெல்களால் சேதமாகியுள்ளன, கண் முன்னால் கண்டு கொண்டிருக்கிற கட்டடங்கள் கண் முன்னாலேயே தரைமட்டமாகின்றது என்று அவர் கூறினார்.

சுமார் 6 சடலங்கள் வரை தான் எடுத்து புதைத்ததாகவும் கூறினார்.

பின்னர் ஒருடிராக்டர், ஒரு லான்மாஸ்ரர், 4 வண்டில்கள் சகிதமும் கால் நடையாகவும் 145 குடும்பங்கள் நீர் வேலிப் பகுதிக்கு வந்து சேர்ந்து பின் அங்கிருந்து இளவாலை வந்து சேர்ந்தோம் இங்கு வந்தபின்னரே நிம்மதியாக நித்திரை செய்தோம், 20 நாட்களில் ஷெல்களின் எதிரொலியால் நித்திரையில் கூட எனதுகுழந்தைகள் ''செல் வருகுது, வெடிக்குது'' என்றுவாய்புலம்புகிறார்கள் என்று அவர் கூறினார். [க-12]

### மக்கள் துளி... வந்துக்கொண்டு இல்லை!

## குதூகலிப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சியில் இருந்து இடம் பெயர்ந்து வலிகாமம், வடமராட்சி பிரதேசங்களில் தங்கியிருக்கும் பல ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு நிவாரணத் திட்டத்தின் கீழ் மண்ணெண்ணெய் இதுவரை வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது

இதன் காரணமாக இடம் பெயர்ந்த குடும்பங்கள் தாமது இருப்பிடங்களில விளக்குகளை ஏற்றுவதற்கு மிகவும் கஷ்டப்பட்டு வருகின்றனர்.

இதேசமயம், தனியார் எரிபொருள் விற்பனை நிலையங்களில் ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் ஐம்பது ரூபாவாகவும், ஒரு லீற்றர் பெற்றோல் நூற்று ஐம்பது ரூபாவாகவும், ஒரு லீற்றர் டீசல் அறுபது ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது (சி-77)

## மனைவியை மிரட்டுவதற்கு

# கழுத்தில் கயிறு மாட்டியவர் பரிதாபகரமாக உயிரிழப்பு

### கோப்பாயில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மனைவியை மிரட்டுவதற்கு கழுத்தில் கயிறு மாட்டியவர் பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவம் கோப்பாயில் இம்மாதம் 2 ஆம் திகதி இடம் பெற்றது.

மின்சாரசபை ஊழியரான நான்கு பிள்ளைகளின் தந்தையான கந்தையா யோகநாதன் என்பவரே பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

கடனுக்கு மது அருந்திய இவர் கடனை செலுத்துவதற்கு மனைவியிடம் பணம் கேட்டதாகவும் மனைவி மறுத்ததையடுத்து நபர் கழுத்தில் கயிறு மாட்டியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(க-12)

# சூரியனிலிருந்து இன்னும் சில தினங்களில் நெருப்பு பிளம்புகள் தோன்றும்

### அமெரிக்க ஆய்வுநிலையம் தெரிவிப்பு

சூரியனிலிருந்து நெருப்புப் பிளம்புகள் அடுத்த சில தினங்களில் வெளியேற இருக்கின்றன. என்று அமெரிக்க வான்வெளி ஆய்வுநிலையம் அறிவித்துள்ளது.

மேலும் இவ்வறிக்கையில் இதன் விளைவாக செயற்கைக்கோள்கள் பாதிக்கப்படுமென்றும், ஆனால் மனிதர்களுக்கு இதனால் எவ்விததீங்கும் ஏற்படாதென்றும் அறிவிக்கப்படுகிறது. (து-க)

# செய்தித் துளிகள்

## சீரில்லா சுகாதார நிலை

(தென்மராட்சி)

வலிகாமம், வடமராட்சிப் பிரதேசங்களில் இயங்கிவரும் இடம் பெயர்ந்தோர் நலன் புரி நிலையங்களில் சுகாதார நிலைமைகள் திருப்திகரமாக இல்லை. எனத் தெரிவிக்கப் படுகின்றது.

இதன் காரணமாக முகாம்களில தங்கியுள்ளவர்கள் மத்தியில் வயிற்றுளைவு, சிரங்கு போன்ற நோய்கள ஏற்பட்டு வருகின்றன.

அதேவேளை நலன் புரி நிலையங்களில் சுகாதார நிலைகளை மேம்படுத்த உதவும்படி முகாம் பொறுப்பாளர்கள் முகாம்களில் தங்கி உள்ளவர்களிடம் கோரி வருதும் குறிப்பிடத்தக்கது. (சி-77)

## கரவெட்டியில் இயங்குகிறது

(தென்மராட்சி)

யாழ்.மாவட்ட சர்வோதய சிரமதான இயக்கத்தின் மாவட்டச்செயலகம் கரவெட்டி பிரதேசசெயலகத்துக்கு அருகில் தற்போது இயங்கி வருகின்றது.

இந்த அமைப்பு வடமராட்சி வலிகாமம் பிரதேசங்களில் தங்கியிருக்கும் தென்மராட்சி இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு நிவாரணப் பணிகளை ஆற்றவுள்ளதாகத்தெரிவிக்கப் படுகின்றது. (சி-77)

## கொடுப்பனவு

யாழ். பிரதேச செயலர் பிரிவில் தையல் பயிற்சியை மேற்கொள்ளும் மாணவிகளின் ஏப்ரல் மாத ஊக்குவிப்புக் கொடுப்பனவு யாழ் பிரதேசசெயலகத்தில் நாளை புதன் தொடக்கம் வழங்கப்படுமென பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (இ)

## மருந்துவகை தட்டுப்பாடு

(தென்மராட்சி)

மந்திகை ஆதாரவைத்திய சாலையில் அத்தியாவசிய மருந்துவகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது.

இதன்காரணமாகவைத்திய சாலைக்கு சிகிச்சைபெற வருகின்ற நோயாளர்களுக்கு மருந்துவகைகளை வழங்க முடியாதநிலை தோன்றிவருவதாக வைத்தியசாலை வட்டாரங்களில்இருந்து அறியப் படுகின்றது.

இதேவேளை வைத்திய சாலையில் நிலவும் அத்தியாவசிய மருந்துவகைகளை வழங்கிஉதவும்படி எம். எஸ். எவ் எனும் பிரான்ஸ் மருத்துவக்குழு வடமராட்சியிலுள்ள உள்ளூர் சேவை அமைப்புகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது இவ்வாறிருக்க யாழ்ப்பாண ... நிலையங்களில ... நோயாளர்களுக்கான மருந்துகளும், இருந்த அழுத்த நோயாளர்களுக்கான மருந்துகளும் தட்டுப்பாடாக உள்ளதாகவும் தெரிவிக்கப் படுகின்றது. (சி-77)

## பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூகநிலையத்தினர் இடம் பெயர்ந்த தமது அங்கத்தவர்களுக்கான சிறுகடனுதவி வழங்கும் திட்டத்தை கடந்த ஞாயிற்றுக்கிழமை வடமராட்சியில் நடைபெற்றநிகழ்வுடன் பூர்த்தி செய்து கொண்டுள்ளனர். என நிலயத்தலைவர் திரு ச கிருஷ்ணன் தெரிவித்தார். (இ)

## 10நோயாளர்களே வருகின்றனர்

[யாழ்ப்பாணம்]

இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையவுள்ள ஐ.சி.ஆர்.சி கப்பலில் பத்து நோயாளர்களும் அவர்களது உதவியாளர்கள் ஒன்பது பேரும் வருகின்றனர். என நேற்று யாழ் போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை 102 பொதிகளும் இக்கப்பலில் எடுத்து வரப் படுகிறது. [சி-12]

## தொண்டர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

மக்கள் நலன்புரிச் சங்க முதலுதவிப் பிரிவு தொண்டர்கள், பாணவர்கள் அனைவரையும் இன்று 12 ஆம் திகதி மாலை 3 மணிக்கு ... அலுவலகத்திற்கு வருகை தருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## வாலிபர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

நல்லூரில் இருந்து இடம் பெயர்ந்து திருநெல்வேலிப்பகுதியில் உள்ள சேதமுற்ற கட்டடம ஒன்றில் வசித்து வந்த வாலிபர் ஒருவர் கட்டடங்கள் இடிந்து விழுந்ததால் காலில் படு... யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சண்முகரத்தினம் தயாதலன் என்பவரே காயமடைந்தவராவார். [க-12]

## தண்ணீருக்கு கஷ்டம்

(நெல்லியடி)

மக்கள் பெருமளவில் தென்மராட்சியிலிருந்து வடமராட்சிக்கு இடம் பெயர்ந்து சென்றமையால வடமராட்சியில குறிப்பாக நெல்லியடிப்பகுதியில கிணறுகள்வறறியுள்ளன, குடிப்பதற்கான நன்னீருக்கும் பலமைல் தூரம் அலைய வேண்டியுள்ளது. பருத்தித்துறைப்பகுதியிலும் இவ்வாறு இடம் பெயர்ந்தோர் பெரும் தண்ணீர்க்கஷ்டத்தை அனுபவிக்கின்றனர் மிகவும் அதிகளவு மக்கள் நெல்லியடியிலேயே தங்கியிருக்கின்றனர், தென்மராட்சிப்பகுதியில் தமதுவீடுகளை அடிக்கடிபார்வையிடச் செல்வதற்கு வசதியாகவே இவர்கள நெல்லியடி, கரவெட்டிப்பகுதிகளில் தங்கியுள்ளனர். (சி-111)

## தரைப்பாதை ஊடாக மக்கள் வருகை

தென்மராட்சிப் பிரதேசத்தில் இருந்து வெளியேற முடியாத நிலையில் இருந்த நூற்றுக்கணக்கானமக்கள் கடந்த மூன்று தினங்களில நீர்வேலி தரைப்பாதை வழியாக வந்து சேர்ந்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அங்கிருந்து வரவேண்டியவர்களை எதிர்பார்த்து தினமும் பலர் நீர்வேலி ... டித் தொழிற்சாலை அருகில் பல்மணி நேரம காத்திருந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (சி-77)

## கொடியேற்றம்

புளியங்கூடல் செருத்தனைப்பதி அருள் மிகு ஸ்ரீ மகாமாரிஅம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர் வரும் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத்தினங்கள் நடைபெறவுள்ளது.

மகோற்சவக் கிரியைகளை தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ க.மகாகணபதீஸ்வரக் குருக்கள் நடத்திவைப்பார்.

## அந்தோனியார் திருநாள்

நாவாந்துறை புனித அந்தோனியார் ஆலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 7மணிக்கு பங்குத் தந்தை அருட்திரு பீற்றர் துரைரத்தினம் அவர்களால் திருநாள் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். (ந)

## இரத்மலானை...

இரத்மலானை மொறட்டுவ கரையோரப் பகுதிகளில் பாதுகாப்பை அதிகரிக்கவும் அங்கு சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (வ)

## கொழும்பு..

கச்சுமத்தப்படக் கூடிய குற்றச்சாட்டுகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டு வருவதாக சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது,

இதேவேளை இக்குண்டுத் தாக்குதல் சந்தேக நபர்கள் கிழக்கு மாகாணத்தில் உள்ள விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் தொடர்பு கொண்டிருந்ததாகவும் இரகசியப்பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்கள் நால்வரும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## யுத்த...

வெளியுறவு அமைச்சருடன் நேற்று இடம் பெற்ற இச் சந்திப்பில், செயலர் இரா சம்பந்தன்யோசப் பரராசசிங்கம எம் பி, உப தலைவர் வி. ஆனந்தசங்கரி, யாழ். மாநகர பிரதி மேயர் ரவிறாஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். (வ)

## யுத்தத்தின்...

நேற்றுப் பிற்பகல் எதிர்க் கட்சி தலைவர் சந்தித்துப் பேசினார்.

இச்சந்திப்பின் போது இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியா தலையிட்டு உதவ வேண்டும் என்று அமைச்சரை ரணில் கேட்டுக் கொண்டார். (வ)

## இரு நாட்டு..

வுக்குமான உறவுகள் தற்போது மிகவும் முன்னேற்றகரமாக இருக்கின்றன இலங்கை இந்தியா ஆகிய இருநாடுகளினதும் அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையில் இப்பேச்சுவார்த்தைகள் அமைந்திருக்கின்றன.

நேற்று நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் எதிர்வரும் நாட்களில் நடைபெறப்போகும் பேச்சுவார்த்தைகளுக்கு பொறுப்பு வாய்ந்ததாக இருக்கும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இதேவேளை தான் சமீபத்தில் இந்தியா சென்ற போது அங்குள்ள தலைவர்களை சந்தித்து இனப்பிரச்சினை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் தெரிவித்தார். (வ)

## தற்கொலை...

இந்தத்தலையை அடையாளம் காணும் பொருட்டு இரசாயன பரிசோதனைக்கு அனுப்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ.ச)

## இந்தியா

ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகிய கட்சிகளின் தலைவர்கள் வெளியுறவு அமைச்சரிடம் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இந்தியா பங்களிப்புச் செய்ய வேண்டுமெனவும், குடாநாட்டில் யுத்தத்தினால் மக்கள் கஷ்டங்களையும் இழப்புக்களையும் சந்தித்து வருவதாகவும் விமானக் குண்டு வீச்சு அதிகரிக்கப்பட்டிருப்பதாகவும், தெரிவித்தனர்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் அமைச்சர் ஜஸ்வந்சிங்; தமிழ் மக்களின் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணவேண்டுமென இலங்கை அரசை வலியுறுத்தவே தான் கொழும்பு வந்ததாகவும் தெரிவித்தார். (வ)

## இலங்கையின்...

அமைச்சருக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் பலன் உள்ளதாக அமைந்திருந்தது என்றும் அக் கூட்டறிக்கை தெரிவிக்கின்றது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது;

இந்திய, இலங்கை உறவுகளில் ஆழமான தன்மை வலிமை, ஆகியவற்றில் தான் நம்பிக்கை கொண்டிருப்பதாகவும், இரு நாடுகளும் பொதுவான வரவேற்கும் சவால்களை எதிர்கொள்ளும் ஆற்றல் உண்டு என்ற நம்பிக்கையுடன் தான் இலங்கையை விட்டு வெளியேறுவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார் (வ)

## இலங்கைக்கு--.

போன்ற அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு பயன்படுத்தப்படவுள்ளதாக தெரியவருகின்றது. (வ-4)

## நயினை ..

பிரிவிற்குட்பட்ட பகுதிக்கு மட்டும் அதிகாலை 4: 30 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை ஊரடங்குச் சட்டம் [illegible] களில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்குமெனவும் பாதுகாப்பு தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.

இதேவேளை நயினாதீவு அம்மனின் தேர்த்திருவிழாவை முன்னிட்டு ஊரடங்குச் சட்டத்தைத் தளர்த்துமாறு ஈ.பி.டி.பி யின் யாழ். மாவட்ட பிரதி அமைப்பாளர் க- மணிபல்லவராஜனும் வலிகாமம் மேற்குப் பிரதேச சபைத் தலைவர் என். திரிலோகநாதனும் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதியிடம் கோரிக்கை விட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. [வ]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அருணேஸ்வரி-ஏரம்பமூர்த்தி

குப்பிளானைச் சேர்ந்த திருமதி அருணேஸ்வரி ஏரம்பமூர்த்தி 11 - 06 - 2000 அன்று காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்றவர்களாகிய விசுவலிங்கம் சிவபாக்கியம் அவர்களின் அன்பு மகளும் ஏரம்பமூர்த்தி (அதிபர் சுன்னாகம் திருஞான சம்பந்தர் வித்தியாலயம்) அவர்களின் பாசமிகு மனைவியும். சைவப்புலவர் அனுசாந்தன், தனேஸ்வரன் (யாழ். பல்கலைக்கழகம் கலைப்பீடம் 4-ம் வருடம் B 1ம் வருடம்) சுதர்ஸ், நிர்மலன், அனுசாந்தி (மாணவர்கள் யூனியன் கல்லூரி) ஆகியோரின் அருமைத் தாயாரும் சோமசேகரம், அருளானந்தம் ஆசிரியர் ஆகியோரின் அன்புச்சகோதரியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 12-06-2000 அன்று நடைபெற்றது என்பதை அறியத்தருகின்றோம்.

தகவல்,

**கணவன்.**

குப்பிளான் வடக்கு,
குப்பிளான். (926)

## அரியரத்தினம் சுந்தரநேசன்

(உரிமையாளர், அரியரத்தினம் ஸ்ரோர்ஸ் மாத்தறை)

கோண்டாவில் கிழக்கு பொற்பதி வீதியைப் பிறப்பிடமாகவும் இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கை, கந்தர்மடத்தை வசிப்பிடமாக கொண்டவருமான அரியரத்தினம் சுந்தரநேசன் 7-6-2000 அன்று மாத்தறையில் அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரியரத்தினம், பாக்கியத்தின் அன்பு மகனும் யோகேஸ்வரியின் (ஆசிரியை, இந்து மகளிர் கல்லூரி யாழ்ப்பாணம்) அன்புக் கணவரும் ஜனகன் அம்பிகா, லக்ஷிகா ஆகியோரின் அன்புத் தந்தையாரும், காலஞ்சென்ற மவுனகுரு, திருமதி மவுனகுரு ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இராமச்சந்திரன், காலஞ்சென்ற சிவேந்திரன், லீலாவதி யோகராணி, சிவலிங்கம், மகேந்திரன், பாலச்சந்திரன், சத்தியமூர்த்தி, செல்வராஞ் தம், சிவநேசன், ஆகியோரின் அன்புச் சகோதரனும், சண்முகராசா, கனகசபாபதி, சிறீஸ்கந்தராஜா, புவனேந்திரராஜா, தெய்வேந்திரன், விஜயதெய்வேந்திரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 12-06-2000 அன்று கொழும்பு சனத்தை மயானத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

மனைவி, சகோதரர்கள் மைத்துனர்கள்.

66/12, இந்துமகளிர்
கல்லூரி ஒழுங்கை.
கந்தர்மடம். (942)

## திருமதி கந்தசாமி-தையல்நாயகி

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த கந்தசாமி - தையல்நாயகி 9-06-2000 வெள்ளி காலை 7.10ற்குமட்டுவிலில் அகால மரணமானார், அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரத்தின் (மெய்கண்டான்) மகளும் காலஞ்சென்ற கந்தசாமியின் அன்பு மனைவியும் திருஞானசம்பந்தர், ஞான பரணி, சற்குருநாதன் ஆகியோரின் அன்புத்தாயாரும் ஸ்ரீதரன், ஜெயராணி, திருவருட்செல்வி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சாரங்கன், அர்ச்சுதா, மிதிலா, வாசுகி, பரணிதரன், சபீரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார் இவ்வறிவித்தலைஉற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்

திருஞானசம்பந்தர்
புலவனார் வீதி,
கல்வியங்காடு.

(928)

# மரண அறிவித்தல்கள்

## சிவசம்பு வன்னியசிங்கம்

(முன்னாள் சுன்னாகம் ப.நோ.கூ. சங்க ஊழியர்)

சுன்னாகம் தெற்கை பிறப்பிடமாகவும் மட்டுவில் வடக்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட. சிவசம்பு. வன்னியசிங்கம்9.6.2000 அன்று அகாலமரணமானார். இவர் சிவதவம். சிவகுரு ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்

குமாரலிங்கம் (குமார்)
[மருமகன்]

(952)

## சின்னத்துரை இரத்தினசிங்கம்

(மதனா ஜுவல்லறி ஊழியர்)

புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும் கைதடி கிழக்கை வசிப்பிடமாகவும் தற்போது கோண்டாவிலில் வசித்தவருமாகிய சின்னத்துரை இரத்தினசிங்கம் 12-06-2000 நேற்றுக் காலமானார்.

இவர் சின்னம்மாவின் அன்புக் கணவரும், ரவீந்திரகுமார், ராஜ்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

ஈமக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கோண்டாவில மயானத்திற்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்

இ. ரவீந்திரகுமார்
(மகன்)

கோண்டாவில் இராமகிருஷ்ண
பாடசாலை அருகாமை,
கோண்டாவில்

(958)

## சின்னத்தம்பி மாணிக்கவாசகர்

(இளைப்பாறிய உப தபாலதிபர்)

சரசாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி வடக்கை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி மாணிக்கவாசகர் நேற்று காலமானார். அன்னார் சிவபாக்கிய அம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சின்னத்தம்பி, பாலாம்பிகை ஆகியோரின் அன்பு மகனும், சுப்பையா பொன்னம்மா (லண்டன்) வின் அன்புச் சகோதரனும், புவனேந்திரன் (ஆசிரியர்) அருந்ததி தெய்வேந்திரன் (சித்த மருத்துவம், மடு) குலேந்திரன் (இ. மி. ச. சாவகச்சேரி) சறோஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும் கண்மலர் (ஆசிரியை) மயில்வாகனம் (இளைப்பாறிய பரிசோதகர் வ. பி. போ. ச.), முத்துலட்சுமி, பத்மாதேவி, நடராசா ஆகியோரின் அன்பு மாமனும், மலர்மகள் (சுவிஸ்) சுதாஜினி (சுவிஸ்), காண்டீபன் (லண்டன்) கவிதா, விஜிதா, கண்ணதாசன். இராஜேந்திரன், இந்துமதி பிரபாகரன், நரேந்திரன், சந்திரமதி, குமார், யுகந்தன், சயந்தன், தர்சிகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்

மா. குலேந்திரன்
(மகன்)

'அடைக்கலந் தோட்டம்'
கந்தசுவாமி கோயில்
கல்யாண மண்டப வீதி,
வட்டுக்கோட்டை.

(கி 490)

லஷ்சுமி
இணுவில்
அஜித், தபு வின்
கண்டு கொண்டேன்
கண்டு கொண்டேன்
10. 30 - 2. 30 [பு.நே]
(கி 486)

ஸ்ரீ செல்வா
யாழ்ப்பாணம்
காலை 10-30 மணி
(பழைய நேரம்)
அஜித் — மம்முட்டி
நடித்த
கண்டுகொண்டேன்
கண்டுகொண்டேன்
(கி-466)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந்தெரு. யாழ்ப்பாணம். எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம் ஆண்டு யூன்மாதம் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.